மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வி எதுவும் இல்லை என்று மிகவும் திருப்தியோடு அமர்ந்துவிட்டார்.

தாம்பரம் நகராட்சியில் குடிநீர் வழங்குதல்

*3378. திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகராட்சியில் 10 நாட்களுக்கு ஒருமுறைதான் குடிநீர் வழங்கப்படுகிறது என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே

(அ) தாம்பரம் நகராட்சியில் மூன்று நாட்களுக்கொரு முறை தற்பொழுது குடிநீர் வழங்கப்படுகிறது.

(ஆ) இந்த நிலையை மாற்றி, தினமும் குடிநீர் வழங்குவதற்கு தனியாக ஒரு திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. ஆய்வு முடிந்தவுடன், திட்டத்தினை பரிசீலனை செய்து அமுல் படுத்தப்படும்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி இன்றைக்கு வருகிறதென்று தெரிந்ததற்குப் பின்னால், தாம்பரம் நகராட்சியின் பல்வேறு பகுதிகளுக்கு நான் நேற்று சென்று வந்தேன். அங்கே 20-வது வட்டத்தில் நேற்றையவரையில் 8 நாட்களுக்கு ஒருமுறைதான் தண்ணீர் வருகிறது. 4 ஆம் வட்டத்தில் குழாய்களில் தண்ணீர் வந்து 6 மாதமாகிறது. எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் அதிகாரிகளிடம் சொல்லி, மறுபரிசீலனை செய்து, அமைச்சரவர்கள் குறிப்பிட்டதுபோல 3 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் வர ஏற்பாடு செய்வார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி ; மாண்புமிகு பேரவைத் தலவைரவர்களே, அங்கே நீர் அழுத்தம் குறைவாக இருக்கிற காரணத்தாலே 3 நாட்களுக்கு ஒருமுறை நீர் கொடுக்கும் திட்டம் இருந்து வருகிறது. பாலாற்றிலே அமைந்துள்ள நீரேற்று நிலையத்திற்குக் கிடைக்கிற தண்ணீரை, வழியிலே இருக்கிற கிராமங்களுக்கும் கொடுக்க வேண்டியிருக்கிற காரணத்தாலே தாம்பரத்திற்குத் தண்ணீர் கொடுக்கும்போது 15 இலட்சம் லிட்டர் தண்ணீர்தான் வழங்கப்படுகிறது. ஆகவேதான் இந்தத் திட்டத்தைத் திருத்தி, நிரந்தர

மாக தாம்பரத்திற்கு அதிகக் குடிதண்ணீர் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, புளியம்பாக்கம் என்ற இடத்திலே இப்போது இருப்பதைத் தவிர, சோளிங்கநல்லூர் அருகிலே ஆய்வு செய்து, மேலும் ஒரு குடிநீர் ஆதாரத்தை உருவாக்குவதற்கு அரசு திட்டங்களைத் தீட்டி வருகிறது. ஆகவே, நிரந்தரமாக அந்தப் பகுதிக்குக் குடிநீரை அதிகமாக வழங்குவதற்கு குடிநீர் வடிகால் வாரியம் திட்டங்களைத் தயாரித்து வருகிறது. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல சில இடங்களில் இருக்குமானால், அதையும் நிவர்த்தி செய்வதற்கு அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சோளிங்கநல்லூர் பகுதியிலிருந்து தண்ணீர் கொண்டுவர திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கிறதென்று சொன்னார்கள். அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கே தண்ணீர் வழங்க முடியாமல், அங்கே இருக்கிற தண்ணீரைச் சென்னைக்குக் கொண்டுவந்து, எங்களை அலைக்கழிக்கிறீர்கள். இன்னும் அந்தத் திட்டம் என்று சொல்லி, அதிகாரிகள் 6 ஆண்டுகளுக்கு இதிலே இழுத்தால், அமைச்சரவர்களுடைய பதவிக் காலமே முடிந்து விட்டாலும்கூட, தண்ணீர் தர மாட்டார்கள் என்பதால், தாம்பரம் நகராட்சியையும், பரங்கிமலை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளையும் கிருஷ்ணா நதிநீர் திட்டத்திலாவது அமைச்சரவர்கள் இணைத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சோளிங்கநல்லூர் பகுதியிலே ஆய்வு செய்யப்பட்டுத்தான் இந்த முடிவுகள் எடுக்கப்படுகின்றன. ஆனால் இப்போது தமிழகத்திலே இது ஒரு தொற்று நோய் போல பரவிக் கொண்டிருக்கிறது. குடிநீருக்காக ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு குடிநீர் எடுத்துச் செல்லும்போது அதை மறுப்பது என்பது ஒரு பேஷனாக மாறிவிட்ட சூழ்நிலை இருக்கிறது. ஆனால் குடிநீர் வடிகால் வாரியத்தைப் பொறுத்த வரையில் ஆய்வு செய்து, நிலத்தடி நீர் பாதிக்காத வகையிலேதான் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. உறுப்பினரவர்கள் குறிப்பிட்டிருக்கிற கருத்தையும் பரிசீலித்து, ஆந்திர அரசு குறிப்பிட்ட எல்லைகளில்தான் அந்த நீரைப் பயன்படுத்த முடியும் என்பதால், அப்படி விரிவுபடுத்தப்படுமானால், தாம்பரத்திற்கும் அதிலே வழங்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்குப் பணிக்கொடை பாக்கி :

*4952. திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?